உள்கட்டமைப்பு மேம்பாடு

60 ஆண்டுகளாக செய்ததைவிட கடந்த 10 ஆண்டுகளில் அதிக சாதனை

புது தில்லி, டிச. 13: நாட்டின் உள்கட்டமைப்பை மேம்படுத்தும் விஷயத்தில் சுதந்திரத்துக்கு பிந்தைய 60 ஆண்டுகளில் செய்ததைவிட கடந்த 10 ஆண்டுகளில் அதிகம் செய்து சாதனை படைத்துள்ளோம் என்று மத்திய தகவல்தொடர்புத் துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்தார்.

தில்லியில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இது தொடர்பாக மேலும் கூறியதாவது:

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு நாட்டின் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது. உள்கட்டமைப்பு வசதிகள் தரமாகவும், நாடு முழுவதும் பரவலாகவும் மேம்படுத்தப்படுகின்றன. பணிகள் விரைவாகவும், பெரிய அளவிலும் செயல்படுத்தப்படுகின்றன.

கடந்த மார்ச் 10-ஆம் தேதி ஒரே நாளில் மட்டும் 15 புதிய விமான நிலையங்களை பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார். உள்கட்டமைப்பு வசதி வளரும் வேகம் என்பது கடந்த 10 ஆண்டுகளாக உச்சத்தில் உள்ளது. சிக்கிம், அருணாசல பிரதேசம் ஆகிய மாநிலங்கள் கடந்த 65 ஆண்டுகளாக எந்த விமான நிலையமும் இல்லாமல் இருந்தன. இப்போது சிக்கிமில் ஒரு விமான நிலையமும், அருணாசல பிரதேசத்தில் 4 விமான நிலையங்களும் உள்ளன.

பாஜக அல்லாத பிற அரசுகள் மத்தியில் ட்சியில் இருந்த சுமார் 70 ஆண்டு காலத்தில் நாட்டில் 74 விமான நிலையங்கள் மட்டுமே இருந்தன. ஆனால், இப்போது கடந்த 10 ஆண்டுகளில் பாஜக அரசு மேற்கொண்ட சிறப்பான திட்டங்கள்மூலம் 157 விமான நிலையங்கள் நாட்டில் இயங்கி வருகின்றன. இது தொடர்ந்து அதிகரிக்கும்.

ஒரு நாடு வளரும் நாடு என்ற நிலையில் இருந்து வளர்ந்த நாடு என்ற நிலையை எட்டுவதற்கு உள்கட்டமைப்பு மேம்பாடு மிகவும் அவசியமானது. உள்கட்டமைப்புத் துறையில் செலவிடும் ஒவ்வொரு ரூபாயும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் 3 மடங்கு வரை அதிகமாக எதிரொலிக்கும் என்றார்.

நீதிபதி லோயா மறைவை சுட்டிக்காட்டி சர்ச்சை கருத்து

மஹுவா மொய்த்ராவுக்கு ரிஜிஜு எச்சரிக்கை

புது தில்லி, டிச.13: நீதிபதி லோயா 'அவரது காலத்துக்கு முன்பாகவே மறைந்துவிட்டார்' என திரிணமூல் காங்கிரஸ் எம்.பி. மஹுவா மொய்த்ரா தெரிவித்த கருத்தால் மக்களவையில் பாஜகவுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதையடுத்து, சர்ச்சைக்குரிய வகையில் பேசிய மஹுவா மொய்த்ரா மீது நடவடிக்கை எடுக்க நேரிடும் என நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு எச்சரிக்கை விடுத்தார்.

அரசமைப்புச் சட்டம் தொடர்பான விவாதத்தின்போது பேசிய மஹுவா மொய்த்ரா முன்னாள் நீதிபதி லோயாவின் மறைவை சுட்டிக்காட்டி, 'எதிர்க்கட்சிகள் மற்றும் தங்களுக்கு எதிராக கருத்து தெரிவிப்பவர்கள் மீது பாஜக அடக்குமுறை நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

விநாயகர் சதுர்த்தி விழாவின் போது ஒரு நீதிபதி (முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட்) வீட்டுக்கு பிரதமர் மோடி செல்கிறார். தீர்ப்பை எழுதுவதற்கு முன் சட்டம், அரசமைப்பு போன்ற காரணிகளை கருத்தில்கொள்ளாமல் கடவுளிடம் கேட்டதாக நீதிபதி ஒருவர் கூறுவார் என்ற நிலையை அரசமைப்பைச் சட்டத்தை இயற்றியவர்கள் கனவிலும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள்.

அரசமைப்புச் சட்டத்தை ஆயிரம் துண்டுகளாக சிதைக்கும் வேலைகளையே ஆளும் பாஜக அரசு செய்து வருகிறது' என்றார்.

மஹுவா மொய்த்ராவின் கருத்துக்கு பாஜக எம்.பி. நிஷிகாந்த் துபே கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

மக்களவையில் வெள்ளிக்கிழமை உரையாற்றிய மஹுவா மொய்த்ரா.

நடவடிக்கை உறுதி: அதன்பிறகு பேசிய கிரண் ரிஜிஜு, 'உச்சநீதிமன்றத்தால் முடித்துவைக்கப்பட்ட ஒரு விவகாரத்தை மீண்டும் மஹுவா எழுப்புவது ஏற்புடையதல்ல. அவைக்கு தவறான முன்னுதாரணத்தை அவர் கற்பித்துள்ளார். அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுவது உறுதி. அவரால் நிச்சயமாக தப்பிக்க இயலாது' என எச்சரித்தார்.

இந்த விவகாரத்தால் பாஜகவுக்கும் பிற எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டதையடுத்து மக்களவை இருமுறை ஒத்திவைக்கப்பட்டது.

மன்னிப்பு கோர வேண்டும்: அதன்பிறகு அவை அலுவல்கள் தொடங்கியவுடன் மஹுவாக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் பேசிய ரிஜிஜுவுக்கு எதிராக திரிணமூல் காங்கிரஸ் எம்.பி. சௌகதா ராய், காங்கிரஸ் எம்.பி. வேணுகோபால் உள்ளிட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களவையின் பாதுகாவலராக அவைத் தலைவர் மட்டுமே செயல்படுவார் என்றும் ரிஜிஜுவின் கடுமையான வார்த்தைகள் மிகவும் தவறானவை எனவும் அவர்கள் குற்றஞ்சாட்டினர். மேலும், மஹுவாவிடம் ரிஜிஜு மன்னிப்பு கேட்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.

ஆதாரங்கள் தேவை: இந்த விவாதத்துக்கு இடையே தலையிட்ட மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா, 'தனிநபர் தாக்குதல்கள் மற்றும் குற்றச்சாட்டுகளை தவிர்த்து அரசமைப்புச் சட்டம் குறித்து ஆக்கபூர்வமான விவாதத்தில் உறுப்பினர்கள் ஈடுபட வேண்டும். தான் தெரிவித்த குற்றச்சாட்டை மஹுவா ஆதாரபூர்வமாக நிரூபிக்க வேண்டும். அதேபோல் ரிஜிஜுவின் பதில் கருத்துகள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படும்' என்றார்.

ரிஜிஜு மீது நடவடிக்கை: இந்த விவகாரம் குறித்து எக்ஸ் வலைதளத்தில் பதிவிட்ட மஹுவா மொய்த்ரா, 'என்னை எச்சரித்ததற்காக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் மீதே நடவடிக்கை எடுக்க வேண்டும். அவரது கருத்துகளே நீக்கப்பட வேண்டும். என்னுடையதல்ல' என குறிப்பிட்டார்.

கடந்த 2014-ஆம் ஆண்டு சொராபுதீன் என்கவுண்டர் வழக்கு ஒன்றை விசாரித்து வந்த நீதிபதி லோயா மறைந்தது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

அவரது உயிரிழப்பில் பல்வேறு சந்தேகங்களை எழுப்பி ஊடகங்களில் செய்திகள் வெளியாயின. இதுதொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட பொதுநல மனுக்களை விசாரித்த உச்சநீதிமன்றம், லோயாவின் மரணம் இயற்கையானது எனவும் அதில் எவ்வித சந்தேகங்களும் இல்லை எனவும் தீர்ப்பு வழங்கியது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் 2030-க்குள் 6ஜி சேவை

மத்திய அரசு தகவல்

நமது சிறப்பு நிருபர்

புது தில்லி, டிச.13: இந்தியாவில் 2030-க்குள் 6ஜி அலைக்கற்றை தொழில்நுட்பம் செயல்பாட்டுக்கு வரும் என்று மத்திய தொலைத்தொடர்பு மற்றும் கிராமப்புற வளர்ச்சித் துறை இணையமைச்சர் பெம்மசானி சந்திரசேகர் பதிலளித்துள்ளார்.

இந்தியாவில் 6ஜி அலைக்கற்றை சேவையின் அறிமுகம் மற்றும் அதன் வரவுக்குப் பிறகு ஏற்படும் விளைவுகள் குறித்து என்று மக்களவையில் வேலூர் தொகுதி திமுக உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு அமைச்சர் பெம்மசானி சந்திரசேகர் வியாழக்கிழமை அளித்துள்ள பதில் வருமாறு: 6ஜி தொழில்நுட்பம் சர்வதேச அளவில் வளர்ச்சி பெற்றுள்ள நிலையில் நம் நாட்டில் இச்சேவை 2030-க்குள் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவின் 6ஜி தொலைநோக்கு பாரத் 6ஜி ஆவணத்தை பிரதமர் கடந்த மார்ச் 23-இல் வெளியிட்டார். அதன்படி, இச்சேவைக்கான வடிவமைப்பில் ஒரு முன்னணி பங்களிப்பாளராக இந்தியா இருக்கும்.

2030-க்குள் 6ஜி தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மற்றும் சேவை வழங்கலை பாரத் 6ஜி கொள்கை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மலிவான, நீடித்த மற்றும் எங்கும் பயன்படுத்தக்கூடிய வகையில் இந்த வசதியை தொலைத்தொடர்புத்துறை வழங்கும். தற்போது சர்வதேச தொலைத்தொடர்பு யூனியன் 4,400-4,800 எம்எச்இசட் மற்றும் 14.8-15.35 ஜிஎச்இசட் அலைவரிசையை உலகளவில் பயன்படுத்துவது குறித்த ஆய்வை செய்து வருகிறது. அதன் முடிவில் சரியான அலைவரிசை அடையாளம் காணப்பட்டு சர்வதேச வானொலி அலைவரிசை மாநாட்டில் விவாதிக்கப்படும். அந்த அலைவரிசையை உள்ளடக்கிய ஐஎம்டி 2030 6ஜி சேவை என அழைக்கப்படும்.

பிறகு இந்த அலைக்கற்றையை ஏலத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலையைச் செலுத்திய பிறகு அதைப் பெற தகுதி பெறும் தொலைத்தொடர்பு நிறுவனம் சேவையை வழங்கலாம். இதற்கான சாதனங்கள் கிடைக்கும் தன்மை அடிப்படையில் 2ஜி/3ஜி/4ஜி/5ஜி /6ஜி உள்பட எந்தத் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்த முடியும் என்று அமைச்சர் கூறியுள்ளார்.

குழந்தை உணவில் கூடுதல் சர்க்கரையைத் தடுக்க மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மக்களவையில் கனிமொழி எம்.பி. கேள்வி

நமது நிருபர்

புது தில்லி, டிச. 13: குழந்தைகள் ஊட்டச்சத்து உணவில் கூடுதல் சர்க்கரை சேர்க்கப்படுவதைத் தடுக்க மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்று மக்களவையில் தூத்துக்குடி தொகுதி திமுக உறுப்பினர் கனிமொழி கேள்வி எழுப்பினார்.

'ஆறு மாதக் குழந்தைகளுக்காக இந்தியாவில் விற்கப்படும் நெஸ்லே நிறுவனத்தின் கோதுமை அடிப்படையிலான செரிலாக்கில், ஒரு பரிமாற்றத்தில் 2.7 கிராம் கூடுதல் சர்க்கரையைக் கொண்டுள்ளதாக சுவிஸ் தன்னார்வ தொண்டு நிறுவனம் அறிக்கை வெளியிட்டிருந்தது. இதுகுறித்து மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?' என்று கனிமொழி எம்.பி. கேள்வி எழுப்பியிருந்தார்.

ஜெ.பி. நட்டா

கனிமொழி

இதற்கு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜெ.பி. நட்டா வெள்ளிக்கிழமை எழுத்துபூர்வமாக தாக்கல் செய்துள்ள பதிலில், 'உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் (குழந்தை ஊட்டச்சத்துக்கான உணவுகள்) விதிமுறைகள், 2020-இல் குழந்தை உணவுப் பொருள்களில் உள்ள சர்க்கரைக்கான வரம்புகள், உலக சுகாதார அமைப்பின் பரிந்துரை ஆகியவற்றை கணக்கில் எடுத்துக் கொள்ளும் 'கோடெக்ஸ் அலிமென்டேரியஸ் கமிஷன்' என்ற உலகளாவிய தரத்திற்கு இணையாக உள்ளது.

சுவிஸ் தன்னார்வத் தொண்டு நிறுவனம் அளித்த அறிக்கை குறித்து இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தால் தாமாக முன்வந்து கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதில் 29.04.2024 மற்றும் 30.04.2024 ஆகிய தேதிகளில், நாட்டில் மேற்கூறிய குழந்தை உணவுப் பொருள்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள உற்பத்தித் தளங்களில் ஆய்வுகள் நடத்தப்பட்டன.

தயாரிப்பு ஆய்வுகளின் அடிப்படையில் குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து உணவுப் பொருளில் சர்க்கரை சேர்க்கப்படுவது, உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைக்கான (குழந்தை ஊட்டச்சத்துக்கான உணவுகள்) விதிமுறைகள் அனைத்தும் 2020-இன் கீழ் உள்ள விதிகளுக்கு இணங்குவதாக கண்டறியப்பட்டது என்று அந்தப் பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடன் வசூல் தீர்ப்பாயம் - III

6வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரி பவன், ஹாரோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-600 006.

TRC எண். 1552/2023 | **மின் ஏல விற்பனை** | தேதி : 11.12.2024

அசல் விண்ணப்ப எண்.**347/2016**-ன்படி A. சரவணன் அவர்களிடமிருந்து பஞ்சாப் நேஷனல் வங்கி, மவுண்ட்ரோடு கிளைக்கு செலுத்த வேண்டிய **31.08.2024 அன்று வரை ரூ.61,80,497.74/-** (ரூபாய் அறுபத்தியொரு இலட்சத்து எண்பதாயிரத்து நாலாயிரத்து தொண்ணூற்று ஏழு மற்றும் பைசா எழுபத்து நான்கு மட்டும்) வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை ஆன்லைன் மின் ஏலம் மூலமாக https://www.bankeauctions.com என்ற இணைய தளம் மூலம் விற்கப்படும்.

சொத்துக்களின் விவரங்கள் :

தென் சென்னை பதிவு மாவட்டம், நீலாங்கரை துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட மனை எண்.6, அன்னை அவென்யூ, ஒக்கியம் துரைப்பாக்கம் கிராமம், சென்னை - 600 097 என்ற முகவரியில் பட்டா எண்.1937ன்படி சர்வே எண்.235/1A3ன்படி மொத்தமுள்ள 2400 சதுர அடி நிலத்தில் 297 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் 2வது தளத்தில் பொது ஏரியா உட்பட 535 சதுர அடி ஆப்பர் பிஸ்த் ஏரியா கொண்ட ப்ளாட் எண்.ஸு2 மற்றும் அங்குள்ள அனைத்து பிட்டிங்ஸ் & பிக்சர்ஸ் மற்றும் அங்கு கொடுக்கப்பட்டுள்ள பிற வசதிகள். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : சர்வே எண்.234ன்படி உள்ள நிலங்கள், தெற்கில் : 12 அடி சாலை, கிழக்கில் : மனை எண்.7, மேற்கில் : மனை எண்.5.

குறைந்த பட்ச விலை : ரூ.18,00,000/- (ரூபாய் பதினெட்டு இலட்சம் மட்டும்)

மின் ஏல தேதி மற்றும் நேரம்	21.01.2025 காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை, ஒவ்வொரு 3 நிமிடத்திற்கும் விற்பனை முடியும் வரை தாமாக கால அவகாசம் நீட்டிக்கப்படும்
முன் வைப்பு தொகை	குறைந்த பட்ச விலையில் 10%
EMD செலுத்தும் முறை & ஏல படிவத்துடன் EMD சமர்ப்பிக்க கடைசி தேதி	20.01.2025 அன்று அல்லது அதற்கு முன்னதாக FT/NEFT/RTGS மூலம் "The Recovery Officer, DRT- 3, Chennai" என்ற பெயரில் கணக்கு எண். 163302000000250, இந்தியன் ஓவர்சீஸ் பேங்க், கதீட்ரல் கிளை, சென்னை-2, IFSC Code: IOBA0000109 -ல் செலுத்தப்பட வேண்டும்.
ஏல உயர்வு தொகை	குறைந்த பட்சம் ரூ.50,000/- அல்லது அதன் பெருக்கல் தொகையான ரூ.50,000/-
சொத்தினை பார்வையிடுதல்	02.01.2025 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை

நேரடியாக சமர்ப்பிக்கப்படும் விலைக்குறிப்பீடுகள் எந்த சூழ்நிலையிலும் தீர்பாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது மற்றும் அது தொடர்பான விசாரணைகள் அனுமதிக்கப்பட மாட்டாது.

மேற்குறிப்பிட்ட ஏலம் மற்றும் மின் ஏலம் குறித்த பிற தகவல்கள் மின்னணு ஏல படிவம் மற்றும் உறுதிமொழி படிவம் மற்றும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை https://www.bankeauctions.com என்ற இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம். சேவை அளிப்பவரின் தொடர்பு கொள்ள வேண்டிய நபர்: திரு.M.பிரபாகரன் - 7418281709

மேலும் விவரங்கள் தேவைப்படின் பஞ்சாப் நேஷனல் வங்கி, வட்டார சாஸ்த்ரா மையம், சென்னை, 2வது தளம், ஸ்பென்சர் பிளாசா, அண்ணா சாலை, சென்னை - 600 002. (தொடர்பு கொள்ள வேண்டிய நபர் : M. வேலாயுதம், முதன்மை மேலாளர் - பஞ்சாப் நேஷனல் வங்கி, கைபேசி எண். : 98400 37314), மின்னஞ்சல் : cs.3612@pnb.co.in.

(P. பிரேம் குமார்)
வசூல் அதிகாரி

ADITYA BIRLA CAPITAL — PROTECTING INVESTING FINANCING ADVISING

ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: இந்தியன் ரேயான் காம்பௌண்டு, வேரவல், குஜராத் - 362266.
கிளை அலுவலகம்: அலகு # 10 & 12, 6ஆவது மற்றும் 4ஆவது தளம், ஓவல் கட்டடம், வெங்கட் நாராயண் சாலை, தி.நகர், சென்னை - 600 017.

தனிப்பட்ட முறையிலான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002 (54/2002), விதி 8(6) & விதி 9(1) ஆகியவற்றின் கீழ் **தனிப்பட்ட முறையிலான** அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு. ஈடு பெற்றுக் கடனளித்த ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் தாக்கல் செய்யப்பட்ட முதல் மேல்முறையீட்டு எண் 335/2022-இன் கீழான இடைநிலை விண்ணப்ப எண் 9864/2022-இன் பேரில் மாண்புமை பம்பாய் உயர்நீதி மன்றம் வழங்கிய 11.01.2023 நாளிட்ட உத்தரவுப்படி கீழே அட்டவணை 'A'இல் குறிப்பாக விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தினை SARFAESI சட்டத்தின் படியும் மற்றும் அதன் விதிகளின்படியும் விற்பனை செய்ய ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனம் அனுமதி பெற்றுள்ளது.

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் (i) M/s. நாதெள்ள சம்பத்துச் செட்டி அண்டு கோ., M/s. நாதெள்ள சுலோச்சனம்மா சாரிட்டபிள் டிரஸ்ட், M/s. நாதெள்ள சம்பத் ஜுவல்லரி பிரைவேட் லிட்., M/s.பரமார்த்த பூதானம் ஸ்ரீ நாதெள்ள சம்பத்துச் செட்டி சாரிட்டீஸ் (கடன்தாரர்கள்), (ii) திரு.நாதெள்ள ரங்கநாத குப்தா, திரு. நாதெள்ள பிரபண்ண குமார், திரு. நாதெள்ள பிரசன்ன குமார், திருமதி நாதெள்ள ராதிகா மற்றும் திருமதி நாதெள்ள லஷ்மி பிரியா (ஜாமீன்தாரர்கள்) ஆகியோரிடமிருந்து ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்துக்கு வர வேண்டியுள்ளதும் கீழே (B) பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் கணக்கு எண்களுக்கு எதிராக (E) பத்தியில் விவரிக்கப்பட்டுள்ளதும் **31.03.2024 நாள்படியானதுமான ரூ.88,66,14,721.74/- (ரூபாய் எண்பத்தெட்டு கோடியே அறுபத்தாறு இலட்சத்து பதினான்காயிரத்து எழுநூற்று இருபத்தொன்று மற்றும் பைசா எழுபத்து நான்கு மட்டும்)** தொகையை கீழே அட்டவணை 'B'இல் விவரித்துள்ளபடி நிலுவைத் தொகைகளைத் திரும்பப் 1.4.2024 வரையிலான அதன் மேல் வட்டி மற்றும் இதர செலவுகளுடன் சேர்த்துத் திரும்பப் பெறும் பொருட்டு ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளதும் ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் நேரடி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "திரும்பப் பெறப்பட மாட்டாது" எனும் எனும் முறையிலும் ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட வகையிலும் **31.12.2024** அன்று தனிப்பட்ட முறையில் அல்லது விதிமுறைகளின்படி, ஒன்றுக்கு மேற்பட்ட ஏலம் பெறப்பட்டால் உள் ஏலம் அல்லது e-ஏலம் விற்பனை செய்யப்பட உள்ளன. இதன் குறைந்தபட்ச விலை ரூ.52,01,42,105/-(ரூபாய் ஐம்பத்திரண்டு கோடியே ஒரு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து நூற்று ஐந்து மட்டும்) மற்றும் டேவணித் தொகை (EMD) ரூ.5,20,14,105/- (ரூபாய் ஐந்து கோடியே இருபது இலட்சத்து பதினான்காயிரத்து நூற்று ஐந்து மட்டும்).

அட்டவணை "A"
அசையாச் சொத்தின் விவரம்:

இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய 30950 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் அங்குள்ள கட்டடம். பழைய கதவு எண் 4, புதிய கதவு எண் 235, ஜவஹர்லால் நேரு சாலை (100 அடிச் சாலை), கோயம்பேடு, சென்னை – 600107, சர்வே எண் 49/3, 50/2B. அமைவிடம் - எண் 106 & 107, கோயம்பேடு கிராமம், எழும்பூர் நுங்கம்பாக்கம் வட்டம். இது மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் அண்ணாநகர் சார்பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது. எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: காலி நிலம் மற்றும் கட்டடங்கள், தெற்கு: 100 அடிச் சாலை, கிழக்கு: டைல்ஸ் ஷோரூம், மேற்கு: மாருதி சுசுகி வொர்க் ஷாப் அனைத்தும் சேர்த்து பரப்பளவு 30,950 சதுர அடி.

இது அண்ணாநகர் சார்பதிவு மாவட்டத்துக்கும், மத்திய சென்னை பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது.

மனை இடத்தின் ஆய்வு நாள் மற்றும் நேரம்: 14.12.2024 முதல் 30.12.2024 வரை முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை முன்அனுமதியுடன்

ஏலப்புள்ளி / டெண்டர்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள், நேரம் மற்றும் இடம்: 30.12.2024 அன்று மாலை 5.00 மணிக்குள் இணையதளம் மூலம் மட்டும்

ஏல நாள், நேரம் மற்றும் இடம்: 31.12.2024 அன்று முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை விற்பனை முடியும் வரை தலா 5 நிமிடங்கள் தானாக காலநீட்டிப்பாகும் வகையில்.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய ஈடுபெற்று கடனளித்த நிறுவனத்தின் இணையத்தளம் https://mortgagefinance.adityabirlacapital.com/Pages/Individual/Properties-for-Auction-under-SARFAESI-Act.aspx மேலும் https://sarfaesi.auctiontiger.net இணையத்தளத்தில் அளிக்கப்பட்டுள்ள இணைப்பைப் பாருங்கள்.

நாள்: 13.12.2024
இடம் சென்னை
கடன் கணக்கு எண்கள்: 0000080000389 மற்றும் 0162101

ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட்
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
(9710917596)

அட்டவணை "B"

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர்	கடன் தொகை	மொத்த நிலுவைத் தொகை
(A)	(B)	(C)	(D)	(E)
1.	0000080000389	(i) M/s. நாதெள்ள சம்பத்துச் செட்டி அண்டு கோ., M/s. நாதெள்ள சுலோச்சனம்மா சாரிட்டபிள் டிரஸ்ட், M/s. நாதெள்ள சம்பத் ஜுவல்லரி பிரைவேட் லிட்., M/s. பரமார்த்த பூதானம் ஸ்ரீ நாதெள்ள சம்பத்துச் செட்டி சாரிட்டீஸ் (கடன்தாரர்கள்), (ii) திரு.நாதெள்ள ரங்கநாத குப்தா, திரு. நாதெள்ள பிரபண்ண குமார், திரு. நாதெள்ள பிரசன்ன குமார், திருமதி நாதெள்ள ராதிகா மற்றும் திருமதி நாதெள்ள லஷ்மி பிரியா (ஜாமீன்தாரர்கள்)	40,00,00,000/-	79,09,75,538.00
2.	0162101	(i) M/s. நாதெள்ள சம்பத்துச் செட்டி அண்டு கோ., M/s. நாதெள்ள சுலோச்சனம்மா சாரிட்டபிள் டிரஸ்ட், M/s. நாதெள்ள சம்பத் ஜுவல்லரி பிரைவேட் லிட்., M/s. பரமார்த்த பூதானம் ஸ்ரீ நாதெள்ள சம்பத்துச் செட்டி சாரிட்டீஸ் (கடன்தாரர்கள்), (ii) திரு.நாதெள்ள ரங்கநாத குப்தா, திரு. நாதெள்ள பிரபண்ண குமார், திரு. நாதெள்ள பிரசன்ன குமார், திருமதி நாதெள்ள ராதிகா மற்றும் திருமதி நாதெள்ள லஷ்மி பிரியா (ஜாமீன்தாரர்கள்)	5,00,00,000/-	9,56,39,183.74

சாகர்மாலா திட்ட நிதியுதவி மூலம் தமிழகத்தில் 8 திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன

மத்திய அமைச்சர் தகவல்

நமது நிருபர்

புது தில்லி, டிச.13: சாகர்மாலா திட்டத்தின் நிதியுதவி மூலம் தமிழகத்தில் 8 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்று மக்களவையில் மத்திய கப்பல், துறைமுகங்கள், நீர்வழிப்போக்குவரத்து துறை அமைச்சர் சர்வானந்த சோனோவால் தெரிவித்தார்.

சர்பானந்த சோனோவால்

மலையரசன்

தயாநிதி மாறன்

இது தொடர்பாக மக்களவையில் மத்திய சென்னை தொகுதி திமுக உறுப்பினர் தயாநிதி மாறன், கள்ளக்குறிச்சி தொகுதி திமுக உறுப்பினர் மலையரசன் ஆகியோர் கேள்வி எழுப்பியிருந்தனர். அதில், தமிழகத்தில் சாகர்மாலா திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும், துறைமுகங்களை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

இதற்கு மத்திய அமைச்சர் சர்வானந்த சோனோவால் மக்களவையில் வெள்ளிக்கிழமை எழுத்துபூர்வமாக அளித்த பதில் விவரம்:

சாகர்மாலா திட்டம் என்பது இந்தியாவின் 7,500 கிமீ நீளமுள்ள கடற்கரையை, 14,500 கி.மீ. செல்லக்கூடிய நீர்வழிகள் மற்றும் முக்கிய சர்வதேச கடல் வர்த்தக வழிகளில் உத்திசார் இடத்தை மேம்படுத்தும் திட்டமாகும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, ரூ.93,376 கோடிக்குமேல் மதிப்புள்ள 98 திட்டங்கள் துறைமுக நவீனமயமாக்கல், துறைமுக இணைப்பு, துறைமுகம் சார்ந்த தொழில்மயமாக்கல், கடலோர சமூக மேம்பாடு மற்றும் கடலோர கப்பல் போக்குவரத்து மற்றும் உள்நாட்டு நீர் வழி போக்குவரத்து தொடர்பான உள்கட்டமைப்பு வசதியை சாகர்மாலா திட்டத்தின் கீழ் மேம்படுத்துவதற்காக தமிழகத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிகள் அமைச்சகம் சாகர்மாலா திட்டத்தின் கீழ் ரூ.1,240 கோடி மதிப்பிலான 22 திட்டங்களுக்கு தமிழகத்தில் ஓரளவு நிதியளிக்கிறது. இந்த 22 திட்டங்களில் 16 திட்டங்கள் முடிக்கப்பட்டுவிட்டன. 8 திட்டங்கள் செயல்பாட்டின்கீழ் உள்ளன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார மையங்களில் பாம்புக்கடிக்கு சிகிச்சை: அரசின் பதிலைக் கோரும் உச்சநீதிமன்றம்

புது தில்லி, டிச. 13: சுகாதார மையங்கள், மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் விஷ முறிவு மற்றும் பாம்புக்கடிக்கான சிகிச்சையை உறுதி செய்வது தொடர்பான மனு குறித்து பதிலளிக்க மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

வழக்குரைஞர் ஷைலேந்திர மணி திரிபாதி தாக்கல் செய்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

அந்த ம